# எறும்பும் நானும்



எறும்பே! எறும்பே! எங்கே போறீங்க?

எந்த வீட்ல இனிப்பு இருக்குன்னு

பாக்கப்போறேங்க!

பாத்து நீங்க என்ன செய்வீங்க?

பதமா நானும் சேத்து வைப்பேங்க!

சேத்து வைச்ச சீனியெல்லாம் என்ன செய்வீங்க?

சேர்ந்தார்க்கெல்லாம் கொடுக்கப்போறேங்க!

நல்ல செய்தி சொன்னீங்க

நானும் தானே சேமிப்பேன்

நல்லவர்க்கெல்லாம் கொடுப்பேன்!